Gandhiji our General - in Tamil.
Madras. 3 copies

M. V. சர்மாவின் இனாம் பிரசுரங்கள் நெ. 2

IMPERIAL R... DEPARTMENT
Regn. No. 3
JUL. 1940

சத்யாக்கிரஹப்போர்

# காந்திஜி-எங்கள் சேனாதிபதி



37
lib 1166/76 P.3

கொட்டடா ஜெயபேரி

(பாரதி)-

அடுத்த பிரசுரம்.

**பிரிட்டன் பிரிவினைச் சூட்சிப் படலம்**

இப்பிரசுரங்கள் விளம்பரஸ்தர்களிடமும் காங்கிரஸ் ஆபீஸ்களிலும் கிடைக்கும். வேண்டியவர்கள் தங்கள் பெயர், விலாசம், 9 பை தபால் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

எம். வி. சர்மா,
18, முத்துமாரிசெட்டி தெரு,
பண்ணடி, சென்னை.

2

# விடுதலைப் போர்

ஐரோப்பாவில் சிறிய நாடுகள்

சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்திற்கும்

எப்படி மாண்டு மடிகின்றன?

இந்தியா தேசத்திய 40 கோடி மக்கள்
"புல்லடிமைத் தொழில் பேணிப் பண்டு
போயின நாட்களுக் கினிமனம் நாணித்
தொல்லை யிகழ்ச்சிகள் தீர-இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி"
வாழ வேண்டாமா? பாரதி

இந்தியா அடிமைத் தேசம். 150 வருஷ-காலமாக ஆங்கிலேயர் அடிமையாக இந்தியரைக் கருதி, மிரட்டி, ஆண்டு, சுதந்திரத்தாகத்தை அடக்கி வருகின்றனர். 1857-ஆம் ஆண்டில்

---

*A. M.* வேங்கோபராவ்
சத்யாக்கிரக சேவ சங்கத் தலைவர்
தண்ணீர்த் தொட்டி டிவிஷன்-ஜி. டி; மதருஸ்

சிப்பாய்க் கலகம் நடந்தது. இந்தியா தான் விடுதலை பெறும் உத்தேசத்துடன் முயன்றது. இது பலாத்கார அம்சம் வாய்ந்த கலகம். 1885-ம் ஆண்டிலிருந்து 1919 ஆண்டுவரை மனோ பலத்தால் இந்தியர்கள் நிர்வாக உத்தியோகங்களிலமர்ந்து சமரசத்தாலும் சமாதானத்தாலும் சுகிர்லாபத்தாலும் விடுதலை யடையப் பார்த்தனர். 1920ஆண்டிலிருந்து ஆத்மசக்தியால்இந்தியமக்கள் சுயராஜ்யம் நிறுவ காந்தியடிகளின் ஞானோபதேசத்தைப்பின்பற்ற ஆசைப்படுகின்றனர்.

பிரிட்டிஷார் பஞ்ச நவ பற்பல தந்திரங்களால் சுதந்தர ஆசையை ஓங்க விடாமல் சமாளிக்கப் பார்க்கின்றனர்.

---

ராயல் பழ சுகபேதி லேகியம்
ரிஜிஸ்தர் நே. 1619
சகலவிதமான உடம்பு வலியையும்
குடலில் தங்கிய அழுக்கையும்போக்கும்
சாப்பிட வெகு ருசியாயிருக்கும்
டெக்கான் பார்மஸி
13, பிடாரியார் கோயில் தெரு, ஜி டி. மதராஸ்

எங்கள் தமிழ்க்கவிச் சக்கரவர்த்தி பாரதியார் இப்போராட்டத்தை வருணித்திருக்கிறார்.

தொண்டு செய்யும் அடிமை

(ஸ்வராஜ்யம் வேண்டுமென்ற பாரத வாசிக்கு ஆங்கிலேய உத்யோகஸ்தர் கூறுவது.)

(மாடுதின்னும் புலையா உனக்கு மார்கழித் திருநாளோ—என்ற பாட்டின் வர்ண மெட்டு.)

1. தொண்டு செய்யு மடிமை-உனக்குச்
சுதந்தர நினைவோடா?
பண்டு கண்டதுண்டோ-அதற்குப்
பாத்திரமாவாயோ?

8. நாடு காப்பதற்கே-உனக்கு
ஞானம் சிறிது முண்டோ?
வீடு காக்கப்போடா அடிமை
வேலை செய்யப் போடா.

---

ரங்கவிலாஸ்

வாசனைப் புகையிலை; துண்டுப்புகையிலை

*Sales Depot:*

45, பந்தர் தெரு, G. T. சென்னை

வாட்டியுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன் வலி காட்டுவேன்.
சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லுவேன் குத்திக் கொல்வேன்
தட்டிப் பேசுவாருண்டோ? சிறைக்குள்ளே
தள்ளுவேன் பழி கொள்ளுவேன்.

இந்திய மகன் சொல்லிய வீரிய வாசகம்

ஜய ஜய பாரத
ஜய ஜய பாரத
ஜய ஜய பாரத
ஜய ஜய ஜய ஜய (ஜய)

ஆரிய பூமியில்
நாரியரும் நர
சூரியரும் சொலும்
வீரிய வாசகம் (ஜய)

---

காய்கறிகள், பழங்கள்—வீட்டில் டெலிவரி
விக்டோயல்ஸ் லிமிடெட்
51, பெரிய தெரு, திருவல்லிக்கேணி,
ஏஜண்டுகள் தேவை

நொந்தே போயினும்
வெந்தே மாயினும்
நந்தே சத்தர்-உ
வந்தே சொல்வது (ஜய)

ஒன்றாய் நின்றினி
வென்றா யினுமுயிர்
சென்றா யினும் வலி
குன்றா தோதுவம் (ஜய)

பாரதி

நாற்பது கோடியும் வாழ்வோம்— வீழில்
நாற்பது கோடிமுழுமையும்வீழ்வோம்
மற்று நீங்கள் செய்யுங் கொடுமைக்கெலாம்
மலைவுறோம், சித்தம் கலைவுறோம்
சதையைத் துண்டு துண்டாக்கினு
முன்னெண்ணம்

---

ஜெய ஜோதி
கலர் குங்கும வியாபாரம்,
4, ஆதியப்ப நாயக்கன் தெருவு, ஜி. டி. மதறாஸ்,
முதல் தரமான குங்குமம்
மொத்தமாகவும் சில்லரையிலும் கிடைக்கும்

சாயுமோ? ஜீவன் ஓயுமோ?
இந்தையத்துள்ளே யிலங்கு மஹாபக்தி
யேகுமோ? நெஞ்சம்--வேகுமோ?

---

என் தாய் நாடு இந்த மண் அல்ல; இந்த மலை அல்ல; இந்த நதி அல்ல; இவைமீது நடமாடும் மக்களின் ஜீவனே அது.

தேவேந்த்ர நாத் சத்யார்த்தி, சென்னை, 3-5-40

## காந்தி—எங்கள் சேனாதிபதி

ராம்கார் காங்கிரஸில் காந்தியடிகளின் யுக்தா யுக்த சமயா சமய உத்தரவைக் காங்கிரஸ் பின் பற்று மென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள காங்கிரஸ் கமிட்டிகள் சத்தியாக்கிரகக் கமிட்டிகளாய் மாற்றப்பட்டாய் விட்டன. ஆயிரக் கணக்கான மக்கள் சத்தியாக்

---

டைமண்ட் பிரஷ் பாக்டரி

(16)ஏழுகிணைத்துத் தெரு, ஜி. டி. மதராஸ்

எல்லாவித மில் பிரஷ்களும் தயார் செய்யப்படும்.

ஏஜண்டுகள் தேவை.

கிரகத்துக்குக் கையொப்பமிட்டு வருகிறார்கள். யுத்தம் எப்போ? எப்போ? என்று சத்யாக்ரக நண்பர்கள் துடி துடிக்கிறார்கள், பின்புத்தியா, முன் புத்தியா? விதியா, மதியா?

எங்கள் சேனாதிபதி காந்தியடிகள் பகைமை முற்றி முதிர்ந்து பழுத்திடுபட்டில் சாந்த மூர்த்தியாய் 'பொறு பொறு' "நாம் தயார் இன்னமு மில்லை" என்கிறார். "பொறுத்துப் பொறுத்து, ஐயோ, நாட்கள் மாதங்கள் போக்குறீர். சத்யாக்கிரகப் போரைத் துவக்கி நடத்தும், அல்லது விலகிக்கொள்ளும்" என்று தீவிர யௌவன சிங்கங்கள் கர்ஜிக்கின்றன. எண்ணமிட்டு எண்ணமிட்டுச் சலித்து நாம் இழந்த நாட்கள் யுகமெனப் போகின்றன. கிழவன், வைசியன்

---

கோயமுத்தூர் லிங்கம் கம்பெனியாரின்
ரோஸ் பிராண்ட் T B M G மார்க்குள்ள
நெய்யை வாங்கி உபயோகியுங்கள்
இதற்கு சமானமான தொன்று மில்லை.
ஏஜண்டுகள்: லிங்கம் ஏஜன்ஸி
88. தம்புசெட்டித் தெரு, மதராஸ்.

பேரக்காரன், வீரமில்லாதவன், அஞ்சினேன் என்று காந்தியைப் பலர் ஏசுகிறார்கள். அதற்கு நாணிலார். ஈாட்டினத்தைச் சுற்றிக்கொண்டு தயாராகுங்கள். "திட்டத்தைப் பூர்த்தி செய்யுங்கள் சண்டைக்கு நான் தயாராயில்லை. நான் ஆரம்பிக்க எனக்குத் திருப்தியில்லை" என்கிறார் காந்தி எங்கள் சேனாதிபதி.

போருக்கு முன்கோலி திட்டத்தை ஏற்படுத்தி யிருக்கிறார்.

போர் திட்டத்தைப் பற்றியவீண் தகராறில் புத்தியைச் சிக்க வைக்காமல் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று காந்திஜி கேட்டுக் கொள்கிறார்.

பலர் மனப் பூர்வமாய் ஒத்துழைப்பதாக சத்யாக்ரக சத்யம் செய்திருக்கிறார்கள்.

குற்றமிழைக்காதவர்கள் எவருமேயில்லை. எல்லாரும் ஒத்து பலத்தைப் பெருக்க வேண்டும்.

---

மிகவும் மங்களூர் உயர்ந்த
கிரேட் தர்பார் பீடிகளை
உபயோகியுங்கள்

சால் ஜாப்பும் சமாதானமும் கூடாது. சம்பவங்களைப் பரிசீலனை செய்ய வேண்டும். நம் தேசத்தின்பால் நாம் செய்தாக வேண்டிய சேவை நம் கடமையுமாகும். நாம் பயமின்றி உண்மையை உணர்ந்து சமாளிக்க வேண்டும்.

நம் தரப்பிலிருந்து வலுவில் அவசரமாய் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படமாட்டாது.

கூடியவரை சமாதானமாகப் போகவே முயலுவோம்

ஜட்லண்ட் போன்றவர் இதை யடக்க திட்டம் நிச்சயமாய்த் தயாருள்ள தென்கிறார்.

பிரிட்டனைப் போல் பயித்தியக்காரப் போலிப்போர் நாம் செய்யக் கூடாது.

பிரிட்டன் யுத்த நோக்க திட்ட குட்டு வெளிப்படுகிறது.

---

நவரத்ன

ஸ்திரீகளுக்கு எவ்விதமான

சூதக சம்பந்தமான வியாதிகளையும் குணப்படுத்தும்

*A.R.P* ஔஷதசாலை, குன்னங்குளம், (S Malabar)

காந்திபேச்சு ஜய நிச்சயம் கண்டுபிடிப்பதா யிருக்கிறது.

முன்போரில் குற்றம் குறைகள் காந்திஜிக்குத் தெரியும். தோல்விகளின் படிப்பினையைத் தெரிந்துகொள்வது தான் முக்கியமானது. அவசரம் கூடாது.

எங்கள் காந்தி உலகம் போற்றும் உத்தமர். ஒருதலைவர் ; ஒப்பற்ற தலைவர்.

அவர் நினைப்பதுவும், பேசுவதுவும், செய்வதுவும், ஒன்றே. சத்யம், தைர்யம், சமரஸம் சமாதானம அவர் அஸ்திர சஸ்திரங்கள்.

காந்திஜி— காங்கிரஸ் சேனாதிபதி யாக ஏகோ பாவமாய் மஹாஜனங்களால் வேண்டிக்கொள்ளப் பெற்று உபதேசியாக விளங்குகிறார்.

* * *

"புவிமிசையின்று மனிதர்க்கெல்லாம் தலைப்படு

---

அம்மனேரி ஜமீன்தாரிணி

டி திரிபுரம்மாள் இலவச வாசகசாலை

தர்மராஜா கோவில் தெரு

வால்டாக்ஸ் ரோட், சென்னை.

மனிதன் தர்மமே உருவாம், மோஹனதாஸ் கரம் சந்திர காந்தி" கவீந்திர ரவீந்திரநாதன்.

*   *   *

அத்தகையகாந்தியை அரசியல்நெறியிலே தலைவனைக்கொண்டு புவிமிசைத் தருமமே அரசியலிதலும், பிற இய லனைத்திலும் வெற்றி தருதமெனவேதஞ் சொன்னமுற்றும் பேண, முற்பட்டு நிற்கின்றார்

பார்த மக்கள்; இதனைற்படைஞர் தஞ்
செருக்கொழிந் துலகிலறந் திறம்
கற்றோர்தலைப்படக்காண்பபோம் விரைவிலே
வெற்றி கூறுமின்! வெண்சங் கூதுமின்!

பாரதி

அன்று கிருஷ்ணபரமாத்மா "உலகம் உய்ய கொல்" என்றார். இன்று காந்திமகாத்மா "உலகம் உய்ய கொல்லப்படு" என்கிறார். முந்தியது ராஜச உபதேசம். பிந்தியது சத்வ உபதேசம்.

கலிப்பா

விடுதலை பெறுவீர் விரைவா நீர்
வெற்றி கொள்வீர்
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை
பொறுமினோ அறப்போரினுக்கு யென்றான்
எங்கோ மேதக மேந்திய காந்தி

—பாரதி

காந்திஜியின் ஜீவ நாடி—அஹிம்சை, சத்தியம். கதர், ஒழுக்கம், நீதி—இவைகளுக்குக் கட்டுப் பட்டு நாம் பயிற்சிபெற வேண்டும்.

* * *

இந்திய மக்கள் யாவரும் நம்பிக்கையுடன் ஒற்றுமையாக அஹிம்சா நெறியில் நின்று தேச விடுதலைக்குப் பாடுபட வேண்டும்.

* * *

பிரிட்டனின் பாரம்பரிய போலித்தன் மையையும், பின்புத்தியையும் ஏகாதிபத்ய துரா சையையும் கவனிக்கையில் சத்யாக்கிரகப் போரா ட்டம் நிகழாமல் இருக்க இயலாது. பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் ராஜசகுணமுடையவன். தர்மம், சமரசம், சமாதானப் பிரியமுடைய வனல்ல. சிசுபாலன் ஒப்ப மகாத்மாவிடம் துவேஷப்பான்மை வாய்ந்தவன்.

ஜெர்மன் கீழ் ஆப்பிரிக்கா காலனியை ஹிட்லர் திருப்பிக்கேட்டான், பிரிட்டன் வசமுள்ளது அது. பிரிட்டன் சம்மதிக்கவில்லை. இதுதான் யுத்த காரணம். போலிக்காரணம் போலண்ட் சுதந்தரம், ஏமாற்றத்தால் நிரபராதிகள் லக்ஷக்கணக்காய் மடிகிறார்கள்.

மஹாத்மாவை மத்யஸ்தராக வைத்து சமரஸ சமாதானத்துக்கு பிரிட்டன் ஒப்புமானால் யுத்தம் உடனே நின்று போகும். முன்வினை மூள்கிறது. சத்யாக்கிரகப் போர் தொடங்குமானால் வெற்றி நம்முடையது என்பதில் ஐயமில்லை.

கொட்டடா ஜயபேரி

"இந்தியா விடுதலை யடையும்

உலகத்துக்கே விடுதலை

எல்லோரும் சமம், சகோதரர்"

என்று.

இந்தியாவுக்கு ஒரு பெருமையளித்த தலைவர் மகாத்மாகாந்திதான். எதிர்காலத்திலும் அவர் தலைமையிலிருந்தால் நாம் வெற்றிபெறமுடியம்.

டாக்டர் பிரபுல்ல சந்தர கோஷ்

ஸில்ஹெட், 3-5-40

NATIONAL ARCHIVES LIBRARY
No 2933
Date 8-3-72
GOVT. OF INDIA

தயாமூர்த்தியையும் அவர் படையையும் சிறைக்கு அனுப்பினால் உலகம் சிரிக்கும்; அனுதாபம் சீர் குலையும்; இக்காரியத்தைத்தான் பிரிட்டிஷார் செய்யப்போவதாகவும இந்தியா மந்திரியும், உதவி மந்திரியும், இந்தியாவில் 150 வருஷமாக இந்தியாவைச் சுரண்டிப் பிழைக்கும் ஐரோப்பா வியாபார வர்க்கத்தினரும் தயாராயிருப்பதாகவும் வீரங் கூறுகிறார்கள்.

* * *

(ஐயன் திருவிளையாட்டு)

"உலகம் யாவையும் தாமுளவாக்கலும் நிலை பெறுத்தலும் நீககலும்"—கம்பர்

---


பாரத் புக் டிபோ., மதராஸ் ஹெட்ஆபீஸ்.

9 கந்தப்ப செட்டி தெரு,

கணக்கு (குறிப்பு, பேரேடு) புத்தகங்கள் தயாரிப்பவர்.

கிளை ஆபீஸ். 323, எஸ்ப்பளனேட், மதராஸ்

எங்களிடம் பேரேடு, குறிப்பு, நோட்புத்தகங்கள், ஸ்டேஷனரி சாமான்கள் சில்லரையிலும் மொத்தத்திலும் விலை சரசமாய்க் கிடைக்கும்

காலேஜ், பள்ளிக்கூடப் புத்தகங்கள் தமிழ் இங்கிலீஷ் நாவல்கள் கிடைக்கும்.

31

# எம். வி. சர்மாவின் இனாம் பிரசுரங்கள்

1. காந்தீஜி அறை கூறல்—ஒத்துழையாமை கொட்டடா முரசு
2. காந்தி எங்கள் சேனாதிபதி
3. காந்தீஜீ தூது
4. பாரததேவி சபதம்

இப்பிரசுரங்கள் இனாமாக அளிக்கப்படும். பிரதானமான நம் போஷக நண்பர்களிடமும் விளம்பரஸ்தர்களிடமும் காங்கிரஸ் ஆபீஸ்களிலும் கிடைக்கும். வேண்டியவர்கள் தங்கள் பெயர், விலாசம், 9 பை. தபால் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.


ஆசார்யா எம். வி. சர்மா,

விசுவாமித்ர ஆசிரமம்"

18. முத்துமாரி செட்டி தெரு, மண்ணடி, சென்னை.



Printed at Nowroji Press, G. T. Madras. 2,000-6-40